4. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) உறுப்பினர் திரு. எம். அப்துல் லத்தீப் மீது—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் 20–2–88 அன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினைக்கான அறிவிப்பைக் கொடுத்திருந்தார். அந்த அறிவிப்பில் திரு. குமரி அனந்தன் அவர்கள், ''இப்பேரவையில் இல்லாத நமது நாட்டின் பிரதமர் மீது ஆதாரம் அற்ற குற்றச்சாட்டைக் கூறியதன் மூலம் இந்த அவை தனக்கு வழங்கியுள்ள உரிமையைத் தவறாகப் பயன்படுத்தி அவை உரிமை மீறல் குற்றத்தை இழைத்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி கோருகிறேன்.'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சினை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டதால், இது தொடர்பாக சென்னை தொலைக் காட்சி நிலைய இயக்குநரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் குறிப்பிட்ட நிகழ்ச்சி எந்த நேரத்தில், எந்த நாளில் ஒளிபரப்பானது என்று தொலைக்காட்சி நிலையத்தார் விவரம் கேட்டிருந்தார்கள். எனவே திரு. லத்தீப் அவர்களிட மிருந்து இது குறித்து விவரம் கேட்டு மீண்டும் தொலைக்காட்சி நிலையத்தினருக்குக் கடிதம் எழுதப்பட்டது. திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்ட நிகழ்ச்சி 17–9–88 அன்று தொலைக் காட்சியின் தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சியில் இரவு 7-30 முதல் 9-00 மணியளவில் பிரதமர் அவர்கள் சனாதன தர்ம சம்ரக்ஷண சமிதி என்ற அமைப்பில் பேசும்போது ஒளிபரப்பப்பட்டதாகத் தெரிவித்தார். இது குறித்துச் சென்னை தொலைக்காட்சி நிலையத்தாருக்கு டெல்லி தொலைக்காட்சி நிலையத்திடமிருந்து கீழ்க்கண்ட 'Telex' செய்தி வந்துள்ளதாகக் கடிதம் வந்துள்ளது.

"Reference Your Telex of Today in connection with the query from State Legislative Assembly Secretariat. Doordarshan did not telecast on September 17 any such item between 7-30 and 9 p.m. as referred to in the letter of the Legislative Assembly Secretariat."

டெல்லி தொலைக்காட்சி நிலையத்தால், இந்த குறிப்பிடப் பட்டுள்ள நிகழ்ச்சி செப்டம்பர் 17, 1988 அன்று இரவு 7-30 — 9-00 மணியளவில் ஒளிபரப்பப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்கள். வேறு ஏதாவது நேரத்தில் ஒளிபரப்பப் பட்டதா என்றும் கூறவில்லை. இதில் திரு லத்தீப் அவர்கள், தான் பார்த்ததை ஞாபகத்தில் இருந்துதான் கூறியிருக்கிறார். அவர் இன்றும் அந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டதாகவும், தான் பார்த்ததாகவும் தெரிவிக்கிறார். இதில் இருந்து பார்க்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் கூறிய செய்தி, அது தவறு என்று அறிந்து, அவையைத் திசை திருப்பும் நோக்கத்துடன் தவறானவற்றை அவைக்கு வேண்டுமென்றே தெரிவித்துள்ளார் என்று கொள்வதற்கில்லை. அதிலும் ஒரு செய்கை அது நிகழவில்லை என்று தெரிந்தும் அவையின் திசையைத் திருப்புவதற்கு அவையில் கூறினால்தான் அது அவை உரிமை மீறிய பிரச்சினையில் அடங்கும்.

If any statement is made on the Floor of the House by a Member or a Minister which another Member believes to be untrue and incomplete or incorrect, it does not constitute a breach of privilege. A breach of privilege can arise only if the Member or the Minister makes a false statement or incorrect statement wilfully, deliberately or knowingly.

எனவே, இதில் அவை உரிமை மீறிய பிரச்சினை ஏதும இல்லை எனத் தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) மதுரையைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. டி. குருசாமி பேரவைத் தலைவருக்கு அனுப்பியுள்ள சட்ட அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. குருசாமி, வழக் கறிஞர், 41, வடக்கு வெளி வீதி, மதுரை—4-4-1989 ஆம் நாளிட்ட சட்ட அறிவிக்கை ஒன்றை எனக்கு அனுப்பியுள்ளார்.

அவ்வறிக்கையில், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களது பதவி விலகல் குறித்து எழுதிய கடிதம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்தவர் பெயர், அவரின் ஏனைய விவரங்கள் பற்றி சட்ட அறிவிக்கை பெற்ற 15 நாட்களுக்குள் மக்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டும் என்றும், தவறினால் அதற்குப் பரிகாரம் பெறும் பொருட்டு, பொதுமக்கள் நலன் கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர நேரிடும் என்றும் கூறியுள்ளார்கள்.

01—30—136